ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1851/17 - 2014 පෙබරවාරි මස 25 වැනි අඟහරුවාදා - 2014.02.25

*1851/17 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் மாத்தறை மாநகர சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

கேட்டு விலகல் காரணமாக மாத்தறை மாநகர சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

களப்பத்தி சதுர ஹர்ச குமார என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் மாத்தறை மாநகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஜயவர்தன விதான பதிரணகே ஜனக என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது மாத்தறை மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் வேவெல்வல ஹேவகே ரவீந்திர விஜயகுமார ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. ஜயவர்தன விதான பதிரணகே ஜனக என்பவர் மாத்தறை மாநகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டபிள்யூ. எச். ஆர். விஜயகுமார,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மாத்தறை மாநகர சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
மாத்தறை,
2014, பெப்புருவரி 11.

3 - 285

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்)**

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

**யாழ்ப்பாண மாநகர சபை**

*யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினரொருவரான திரு. சுதர்சிங் விஜியக்காந்த், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளார் என யாழ்ப்பாண மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பொன்னுத்துரை குகநாதன் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ (1) (அ) என்னும் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகின்றேன்.*

பொ. குகநாதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
யாழ்ப்பாண மாநகர சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2014, பெப்புருவரி 18.

3- 286

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.